TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108587

1. District : DVAC
மாவட்டம்
PS: HQrs
காவல்நிலையம்
Year: 2021 FIR No.: 03 Date: 23-01-2021
ஆண்டு முதகஅ எண் நாள்

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7 & 12.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 22.01.2021
Date to : நாள் வரை 22.01.2021
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 1645 hrs
Time to : நேரம் வரை 2300 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.01.2021
Time : நேரம் 00.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.01.2021
Time : நேரம் 0900 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 13 Kms, North East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Chepauk Branch Indane Gas Branch at Triplicane Urban Co-operative Society, O/o Joint Director / Managing Director office building TUCS, Triplicane.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. K. Kumaran
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : M. Chockalingam
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 45
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : District Deputy Inspection Cell officer
தொழில்
(g) Address : Chennai District, Chennai.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. N. B. Saravanan A/53 S/o N. Baskaran, Sales Asst, Chepauk TUCS Ltd, Triplicane.
2) Tr. M. G. Gowthaman A/58 S/o Gurunathan, Accountant, TUCS Ltd, Tampaam
3) Tr. K. Rajendran A/56 S/o Krishnaiyar, Junior Asst, TUCS Ltd, Periyar Nagar, CH-82.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted Cash Rs. 2,06,835/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Contents is enclosed in a Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/1/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.01.2021

Name: பெயர் K. VENUGOPAL
Rank: நிலை Inspector No. எண் of Police

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைதலைமையகுற்றஎண்.03/2021பிரிவு 102 கு.விமுச. மற்றும் 7& 12 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் வழக்கின் முதல் தகவல்அறிக்கைவரிசைஎண்.12-ன் தொடர்ச்சிபின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் K.வேனுகோபால், ஆகிய நான் 23.01.2021அன்று இரவு 00.30 மணியளவில் திரு.சி.கே.குமரன், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னைமாவட்டம், என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணைகண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுக் குழு-1 சென்னைஅவர்கள் மனுவை பரிசீலனை செய்து அம்மனுவில் வழக்குபதிவு செய்து மேல் விசாரணை செய்ய உத்தரவு வழங்கியதன் மூலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்றஎண்.03/2021பிரிவு 102 கு.விமுச. மற்றும்7 & 12ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 வழக்குபதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது. மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.சி.கே.குமரன், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம், பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை-16. கடித எண்.அ/19/2021நாள் - 22.01.2021, அய்யா, பொருள், இரு துறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-05, திருவல்லிகேணி, பெரிய தெரு என்ற இடத்தில் இயங்கி வரும் திருவல்லிகேணி நகர கூட்டுறவு சங்கத்தின் எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர் எண்.0000519209 என்ற அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 22.01.2021 - ஆய்வுக் குறிப்பு மற்றும் இதர ஆவணங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,06,835/- மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்டங்களின் மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இரு துறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 22.01.2021-ம் தேதி சென்னை-05, திருவல்லிகேணி,

பெரிய தெரு என்ற இடத்தில் இயங்கி வரும் திருவல்லிகேணி நகர கூட்டுறவு சங்கத்தின் எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர் எண்.0000519209 அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறைதிடீர் கூட்டுத் தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.2,06,835/- கைப்பற்றப்பட்டது. கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்டத் தொகைரூ.2,06,835/- மற்றும் பின்வரும் ஆவணங்கள் ஆகியவை உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

ஆவணங்களின் விவரங்கள்:1.Statement of Tr.N.B.Saravanan, M/a 53/21, S/o.N.Baskaran, Sales Assistant, TUCS Ltd., Chepauk, Triplicane, Chennai-5. Residing at No. 2/849, Kulakarai Street, Madipakkam, Chennai-91. (Mobile No.98401 38530) 2. Statement of Tr.A.G.Chandrasekar, M/a 57, D.O.B.10.06.1963. S/o.Govindasamy, Joint Registrar/Managing Director, No.156, Triplicane Urban Co-operative Society Ltd., Chennai-5. Residing at No. 3/317, Vallar Street, Uthandi, Chennai-119. (Mobile No.99401 24741, 98849 31964) 3. Statement of Tr.M.G.Gowdaman, M/age 58, S/o.Gurunathan, Accountant, TUCS Ltd., Tambaram, Chennai. Residing at No. 14, Vaigunda Nadar Street, Rayapuram, Chennai-13. (Mobile No. 94440 04619.) 4. Statement of Tr.K.Rajendran, M/a 56, S/o.Krishnaiyar, Junior Assistant, TUCS Ltd.,Periyar Nagar, Chennai-82. Residing at No. 3 Srinath Nagar 2nd Street, Nemilichery, Thiruvallur District. (Mobile No.99403 50526 and 90425 60169.) 5. Statement of SelviA.Divya, Age, 28/2021, D/o. P.Arumugam (late), No.51/23, A.E Kovil Street, Tonidaiarpet, Chennai-81. (Mobile 9003151461) 6. Statement of Tmt.S.Sarswathi, F/age 34, W/o.Saravanan, Salesman, TUCS, Triplicane Chennai. Residing at No.1/755, Ellaiamman Nagar, Thuraipakkam, Chennai-97. (Mobile No 98418 82260.) தங்கள் நம்பிக்கைக்குரியமாவட்டதுணைஆய்வுக்குழுமஅலுவலர், சென்னைமாவட்டங்கள் இணைப்பு மேற்கண்டவாறு On 23.01.2021 at 00.30 hrs Inspector of Police, Tr.K.Venugopal, is instructed to register a case Sd//V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter and Registered on 23.01.2021 at 09.00hrs a case in V&AC, Head Quarters Cr.No.03/2021 u/s 102 Crpc and 7 & 12 of The Prevention of Corruption (Amendment) Act 2018 Sd//K.Venugopal, Inspector/SIC-1, on 23.01.2021.

சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்புப் புலனாய்வுக் குழு-1 காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து 22.01.2021 சென்னை-05, பெரியதெரு, திருவல்லிகேணி, என்ற இடத்தில் இயங்கிவரும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் சேப்பாக்கம் எரிவாயு கிளை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு துறை கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை. இரு துறை கூட்டுத் தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் 1. திரு.சி.கே.குமரன், மாவட்ட துணை ஆய்வுக் குழுமஅலுவலர், சென்னைமாவட்டம், 2. திரு.வா.பாஸ்கரன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 3. திரு.D.செல்வக்கண் டேவிட், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 4. திரு.கி.வேணுகோபால், காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16, 5. திருமதிS.மலர்கொடி, காவல் ஆய்வாளர்,சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16, 6. திருமதி.ஜோ.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, 6. திரு.B.சரவணன், விற்பனை உதவியாளர் சென்னை-05, திருவல்லிகேணி பெரிய தெருவில் உள்ள திருவல்லிகேணி நகர கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இயங்கி வரும் எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர் எண்.0000519209 என்ற அலுவலகத்தில் அலுவலர்கள் கையூட்டுப் பெறுவதாகஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு-1 அலுவலகத்திற்கு நம்பகமான தகவல் கிடைத்ததையடுத்து சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சி.கே.குமரன் அவர்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் அடிப்படையில் மேற்படிதுணைக் காவல் கண்காணிப்பாளர் தனது அணியினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வந்த துணை ஆய்வுக் குழும அலுவலரும் மேற்படி அலுவலகத்தில் இருந்து சுமார் 3.00 மணிக்கு புறப்பட்டு திருவல்லிகேணி நகர கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் உள்ள

எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.45 மணியளவில் ஆய்வு மேற்கொள்வதற்காக வந்து சேர்ந்தோம். அப்போது மேற்படி திருவல்லிகேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் இணைபதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் அலுவலகத்தில் திரு.A.G.சந்திரசேகர், அவர்களிடம் துணை ஆய்வுக் குழும அலுவலர் திரு.சி.கே.குமரன் மற்றும் காவல் குழுவினர் அறிமுகம் செய்து கொண்டு எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின் போது கிழக்கு நோக்கிய கணினி மேஜையின் முதலாவதாக திருமதி.S.சரஸ்வதி, விற்பனையாளர், TUCS ltd அவரை தொடர்ந்து கணினி இயக்குபவராக செல்வி.A.திவ்யா என்ற தற்காலிக பணியாளரும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அடுத்ததாக கிழக்கு நோக்கிய தனி மேஜையுடன் கூடிய இருக்கையில் விற்பனை உதவியாளர் திரு.N.B.சரவணன் என்பவர் அமர்ந்திருந்தார். மேலும் அந்த அறையில் மாதாந்திர கூட்டத்திற்காக வெவ்வேறு எரிவாயு கிளைகளிலிருந்து வத்திருந்த திரு.எஸ்.கங்கன், விற்பனையாளர், சாஸ்திரிநகர், திரு.கே.ராஜேந்திரன், இளநிலை உதவியாளர், பெரியார் நகர், திரு.கே.வெங்கடேசன், கணக்காளர், மாம்பலம், திரு.ஸ்ரீகாந்த், விற்பனையாளர், செனாய் நகர், திரு.எம்.ஜி.கௌதமன், கணக்காளர், தாம்பரம், திருமதி.கே.விஜயலட்சுமி, விற்பனையாளர், வில்லிவாக்கம் மற்றும் திருமதி.ஜெ.ஜெயந்தி, விற்பனையாளர், திருவான்மியூர் ஆகியோர் இருந்தனர். மேற்படி அறையில் அமர்ந்திருந்த விற்பனை உதவியாளர் திரு..N.B.சரவணன் அவர்களை சோதனை செய்த போது அவரிடம் ரூ.2,720/- இருந்தது. அதைப் பற்றி அவரிடம் கேட்ட போது அவர் தனது கைச்செலவிற்காக பணிக்கு வரும் போது கொண்டு வந்ததாக தெரிவித்ததால், அத்தொகை அவரிடமே மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் முன்னிலையில் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மேலும் அவருடைய பொறுப்பிலிருந்த பணப் பெட்டியிலுள்ள பணத்தை அவர் ஆஜர் செய்தார். அதை எண்ணிப் பார்த்த போது, அதில் மொத்தம் ரூ.3,62,142/-இருத்தது. அந்த நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| ரூபாய் நோட்டு | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| ரூ.2,000/- | 20 | 40,000 |
| ரூ.500/- | 484 | 2,42,000 |
| ரூ.200/- | 193 | 38,600 |
| ரூ.100/- | 354 | 35,400 |
| ரூ.50/- | 79 | 3,950 |
| ரூ.20/- | 53 | 1,060 |
| ரூ.10/- | 107 | 1,070 |
| ரூ.5/- | 12 | 60 |
| நாணயம் ரூ.2/- | 1 | 2 |
| | மொத்தம் | 3,62,142 |

மேற்படித் தொகைக்கான விளக்கத்தை கேட்ட போது, 22.01.2021 தேதியில் 306 எரிவாயு உருளைகள் விநியோகம் செய்யப்பட்டதற்காகவும், அதில் ஆன்லைன் மூலமாக 11 எரிவாயு உருளைகள் விற்கப்பட்டு அதற்காக ரூ.7,810/- தொகை நேரடியாக டி.யு.சி.எஸ். தலைமையக கணக்கிற்கு செலுத்தப்பட்டு விட்டதாகவும், மேலும் 16 எரிவாயு உருளைகள் காசோலைகள் மூலம் விற்கப்பட்ட வகையில், ஹானரரி செக்ரட்டரி, டிபார்ட்மெண்டல் கேண்டீன், தூர்தர்ஷன் கேந்த்ரா என்பவரிடமிருந்து பெறப்பட்ட காசோலை எண்.987145 நாள் 22.01.2021 ரூ.4,260/- மற்றும் வார்டன், மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் அலைட் ஹெல்த் சயின்ஸ் கிராஜுவேட்ஸ் ஸ்டுடண்ட்ஸ் மென்ஸ் ஹாஸ்டல், சென்னை-3 என்பவரிடமிருந்து பெறப்பட்ட காசோலை எண்.146231 நாள் 20.01.2021 ரூ.7,100/- மொத்தம் ரூ.11,360/- பெறப்பட்டதாகவும், மூன்று புதிய எரிவாயு இணைப்புகள் வழங்கியது தொடர்பான சாதனங்கள் வழங்கியதற்காக ரூ.15,137/- பெறப்பட்டது என்று கூறினார். மேற்படி 279 எரிவாயு உருளைக்காக நேரடியாக பெறப்பட்ட

மொத்த தொகையாக ரூ.1,98,090/- என்றும், மேற்படி ரொக்கத் தொகையாக பெற்ற வகையில் மொத்தம் ரூ.2,09,677/- என்று கணக்கிடப்பட்டது. பணப் பெட்டியிலுள்ள ரூ.3,62,142/- தொகையிலிருந்து மேற்படி பெற்ற ரொக்கத் தொகையான ரூ.2,09,677/- போக, கூடுதலாக ரூ.1,52,465/- தொகை காணப்பட்டது. இந்த கூடுதல் தொகை குறித்து விற்பனை உதவியாளர் திரு..N.B.சரவணன் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, அவர் இணைப் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் கூட்டத்திற்காக கிளை அலுவலகத்திலிருந்து வந்த பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் கொடுப்பதற்காக தன்னிடம் வழங்கப்பட்ட தொகை என கூறினார். எனவே விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை ரூ.2,09,677/- திரு.N.B.சரவணன் அவர்களிடம் திரும்ப வழங்கப்பட்டு, மேற்படி கூடுதல் தொகை ரூ.1,52,465/- லஞ்சப் பணமாக கருதி மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் அவர்களால் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் மேற்படி கூட்டத்திற்கு வந்திருந்த திரு.எம்.ஜி.கௌதமன், வயது 58, த/பெ. எம்.குருநாதன், கணக்காளர், தாம்பரம் எரிவாயு கிளை, என்பவரைசோதனைசெய்தபோது, அவரிடம் ரூ.25,000/- மற்றும் ரூ.6,900/- ஆகிய இரண்டு தொகைகள் தனித்தனியாக வைத்திருந்தார். அதுகுறித்து விளக்கம் கேட்டபோது, ரூ.6,900/- தன்னுடைய சொந்த பணம் என்றும், ரூ.25,000/-ஐ உயரதிகாரிகளிடம் கொடுப்பதற்காக கொண்டு வந்ததாகதெரிவித்தார். எனவேரூ.6,990/- அவரிடமே திரும்ப வழங்கப்பட்டது. ரூ.25,000/- லஞ்சப் பணம் என்பதால் அத்தொகை மாவட்ட துணைஆய்வுக் குழும அலுவலரின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. திரு.கே.ராஜேந்திரன், வயது 56, த/ பெ. கிருஷ்ணஐயர், இளநிலை உதவியாளர்,பெரியார் நகர் எரிவாயு கிளை, என்பவரை சோதனை செய்த போது, அவரிடம் ரூ.25,000/- மற்றும் ரூ.640/- ஆகிய இரண்டு தொகைகள் தனித்தனியாக வைத்திருந்தார். அது குறித்து விளக்கம் கேட்டபோது, ரூ.640/- தன்னுடைய சொந்தபணம் என்றும், ரூ.25,000/-ஐ உயரதிகாரிகளிடம் கொடுப்பதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். எனவே ரூ.640/- ஐதொகையை அவரிடமே திரும்ப வழங்கப்பட்டது. ரூ.25,000/ - லஞ்சப் பணம் என்பதால் அத்தொகை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் பால்கனியின் தரையில் யாரும் கேட்பாரற்று

கிடந்த சுருட்டப்பட்ட நிலையிலிருந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்த போது, அதில் ரூ.4,370/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரங்கள் பின்வருமாறு.

| ரூபாய் நோட்டு | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| ரூ.500/- | 8 | 4,000 |
| ரூ.200/- | 1 | 200 |
| ரூ.100/- | 1 | 100 |
| ரூ.50/- | 1 | 50 |
| ரூ.10/- | 2 | 20 |
| | மொத்தம் | ரூ.4,370/- |

திரு.N.B.சரவணன், இளநிலை உதவியாளர் பதவியில் பணி புரியும் விற்பனை உதவியாளர், என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராதகூடுதல் தொகை ரூ.1,52,465/-, திரு.எம்.ஜி.கௌதமன், கணக்காளர், தாம்பரம் எரிவாயு கிளை, என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை ரூ.25,000/-, திரு.கே.ராஜேந்திரன், இளநிலை உதவியாளர், பெரியார் நகர் எரிவாய ,கிளை, என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகை ரூ.25,000/- மற்றும் பால்கனி தரையிலிருந்து கேட்பாரற்று கிடந்த ரூ.4,370/- ஆக மொத்தம் ரூ.2,06,835/- தொகை விசாரணைக்காக மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரால் கைப்பற்றப்பட்டது. அலுவலகத்திலிருந்தவருகைப் பதிவேடு, 22.01.2021 தேதிக்கான தினசரி விற்பனைப் பட்டியல் ஆகியவை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலரால் சோதனை செய்யப்பட்டது. இந்த அலுவலகத்தின் 21.01.2021 முதல் 20.02.2021 வரையிலான வருகைப் பதிவேட்டில் திரு.என்.பி.சரவணன், இளநிலை உதவியாளர். திருமதி.எஸ்.சரஸ்வதி, விற்பனையாளர், திரு.டி.சேகர், உருளை சப்ளை செய்யும் நபர் ஆகிய மூவர் கையெழுத்திட்டிருந்தனர். திரு.ஆர்.ராஜேந்திரன் மற்றும் திரு.எஸ்.சந்தானம் ஆகிய உருளை சப்ளை செய்யும் இரண்டு

அலுவலர்கள் கையெழுத்திடவில்லை. இந்த வருகைப் பதிவேட்டின் மேற்படி பக்கம் ஜெராக்ஸ் நகல் எடுக்கப்பட்டு, அதில் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரால் கையெழுத்திடப்பட்டு மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வருகைப் பதிவேட்டில் பெயரில்லாத அதிகாரப்பூர்வமில்லாமல் இவ்வலுவலகத்தில் பணி புரியும் செல்வி.ஏ.திவ்யா, வயது28, த/பெ.பி.ஆறுமுகம்,எண்.51/23, ஏ.ஈ. கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-81 என்பவரை விசாரிக்க, அவர் கடந்த நான்கு வருடங்களாக தினக்கூலி அடிப்படையில் அதிகாரப்பூர்வமில்லாமல் கணினிப் பணியாளராக பணி புரிவதாகவும், அதற்கு விற்பனை உதவியாளர் திரு.N.B.சரவணன் என்பவரிடமிருந்து தினக்கூலியாக ரூ.350/ - வீதம் பெற்று வருவதாகவும் தெரிவித்தார். 22.01.2021 தேதிக்கான தினசரி விற்பனைப் பட்டியலின் நகல் விற்பனை உதவியாளர் திரு.N.B.சரவணன் மற்றும் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் ஆகியோரின் அத்தாட்சி பெற்று கைப்பற்றப்பட்டது. டெலிவரி ஸ்டேட்டஸ் சம்மரி நாள் 21.01.2021 மற்றும் 22.01.2021 அன்று வங்கியில் பணம் செலுத்திய செலான் ஆகியவற்றை நகல் எடுக்கப்பட்டு, அதில் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரின் ஒப்பம் பெறப்பட்டு, மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.ஏ.ஜி.சந்திரசேகர், இணைப் பதிவாளர்/ மேலாண்மை இயக்குனர், திரு.N.B.சரவணன், இளநிலை உதவியாளர் பதவியில் விற்பனை உதவியாளர், திருமதி.எஸ்.சரஸ்வதி, விற்பனையாளர், திரு.எம்.ஜி.கௌதமன், கணக்காளர், தாம்பரம், திரு.கே.ராஜேந்திரன் ,இளநிலை உதவியாளர், செனாய் நகர் மற்றும் அதிகாரப்பூர்வமில்லாமல் இவ்வலுவலகத்தில் பணி புரிந்து வரும் செல்வி.ஏ.திவ்பா ஆகியோரிடமிருந்து பெறப்பட் டகையொப்பமிட்ட வாக்குமூலங்களில் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் கையொப்பமிட்டார். மேற்படி இருதுறை திடீர் தணிக்கை 22.01.2021 இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. sd/xx சி.கே.குமரன் மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை. sd/xx (வா.பாஸ்கரன்) காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. sd/xx (D.செல்வக்கண் டேவிட்) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. sd/xx (K.வேணுகோபால்,) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. sd/xx (ஜோ.கிறிஸ்டி) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. sd/xx (S.மலர்கொடி) காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக் குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. sd/xx (B.சரவணன்) விற்பனை உதவியாளர் சென்னை-05. பெரிய தெரு, திருவல்லிகேணி எரிவாயு சேப்பாக்கம் கிளை இண்டேன் டிஸ்ட்ரிபியூட்டர்.

Hon'ble Sir,

The above complaint was received and registered in V&AC, Headquarters in Cr.No.03/2021/AC/HQ u/s 102 Crpc and 7 & 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 23.01.2021 at 09.00hrs (sd/xxxx Inspector of Police, SIC-1, V&AC, Chennai-16. The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceeding was submitted before the Hon'ble Special Judge, Chennai.

23/1/2021

(K.வேணுகோபால்)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக் குழு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,
சென்னை-16.